LIBRARY
13 NOV 1962
MADRAS LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 20th July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மாவட்ட விளம்பர அதிகாரிகள்

**429 கேள்வி.—திரு. சா. கணேசன் : (திரு. கரு. சீமைச்சாமி சார்பாக) : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

மாவட்ட விளம்பர தகவல் இலாகாவில் மாவட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதால் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் என்ன ?

கனம் திரு. ஜி. பூவராகன் : இவ்வதிகாரிகளின் அலுவல் களின் பயனைப் பொதுமக்கள், முக்கியமாகக் கிராம மக்கள், அரசாங்கம் செய்யும் பணிகளை நல்ல முறையில் அறிந்து கொள் கிறார்கள். இதன்மூலம் அரசாங்கத்தின் திட்டங்களை நிறைவேற்ற மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கிறது.

குறுவாரப்பன் கோவில், ஜெயங்கொண்டான்

***441 கேள்வி.—திரு. ராம. அரங்கண்ணல் :** *கனம் நிதி அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

ஜெயங்கொண்டான் அருகிலுள்ள குருவாரப்பன் கோவிலில் குடி கொண்டிருந்த இராமர், சீதை, இலட்சுமணர், அனுமார் ஆகிய கடவுள்கள் திருட்டுப் போய்விட்ட விபரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. Five idols were stolen.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், இந்த அளவுக்கு, கடவுளார் களையே களவாடக்கூடிய அளவுக்கு சில அறிஞர் கூட்டங்கள் தோன்றி இருக்கின்றன. ஆகவே தீவிரமாகப் பரிசிலனை செய்து அவர்களைக் கண்டுபிடித்து அவர்களை வைக்க வேண்டிய இடத்தில் இதுவரையில் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்களா ? இத்தகைய இராவணக் கூட்டங்களைக் கண்டுபிடிக்க அரசாங்கம் தீவிர நட வடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிலருக்கு செக்குக்கும் சிவ லிங்கத்திற்கும் வித்தியாசம் இல்லை என்று சொல்லுவார்கள்.